IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

HMOP 28/2025

Deposition of PW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 20.11.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | இலக்கியா | **Caste** | : | |
| **W/o.** | **:** | சந்தோஷ்குமார் | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | எதிர்மனுதாரர், மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டுமென்று தாக்கல் செய்துள்ள மனு HMOP NO. 48/2022 | சார்வு நகல் |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

எதிர்மனுதாரர் என் மீது HMOP NO. 48/2022 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றாலும நான் அவருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று பதில் மனு தாக்கல் செய்திருந்தேன் என்றாலும் சரிதான். 10 வருட காலமாக எதிர்மனுதாரருடன் பிரிந்து வாழ்ந்ததால்தான் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 6 வருட காலமாக என் கணவரை பிரிந்து வாழ்ந்து வருகிறேன். என் கணவர் என்னைஅடித்து

துன்புறுத்துவதாகசொல்வது சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால்ச ரிதான். எனக்கும் எதிர்மனுதாரருககும் நடைபெற்ற திருமணத்தின் போது எனது பெற்றோர் 5 பவுன் நகை போட்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை நல்ல முறையில் வாழ்ந்ததால்தான் எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்துள்ளனர்எ ன்றாலும் என் கணவர் என்னை அடித்து துன்புறுத்தியதால் வீட்டைவிட்டு வெளியே வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது ஊர்காவல் படையில் பணி செய்து வருகிறேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நல்லமுறையில் வேலை செய்து என்னையும் என் குழந்தைகளையும் பராமரித்து வந்தார் என்றும் எதிர்மனுதாரரின் தாயார் உடல்நிலை சரியில்லாமல் அவரை பார்த்துகொள்ளவும், பராமரிக்கவேண்டும் என்ற பொறுப்பில் இருநந்து விலகி எதிர்மனுதாரருடன் வாழ்ந்து வந்த குடும்ப வாழ்க்கையில் இருந்து விலகி என் பெற்றோர் வீட்டில் நான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2022ம் வருடம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருந்த Restitutional of Conjugal rights எதிர்மனுதாரர் அவருடன் சேர்ந்து வாழவேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றும் அதில் இருந்து தப்பிக்க வேண்டி 2025ம் ஆண்டு நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மீது நான் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை தவிர்த்து எதிர்மனுதாரர் இந்த விவாகரத்துக்கு சம்மதிப்பதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/–இலக்கியா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.